5. கடன் கிடைக்காமல் நிறுவனத்தை முடிவிடும் நிலைமை ஏற்பட்டால் சட்டப்படி நோட்டீஸ் சம்பளமும் நஷ்டஈடும், கிராஜுடி தொகையும் 15 நாட்களுக்குள் கொடுக்கப்படும்.

6. இந்தக் கம்பெனியோ அல்லது இத்துடன் இணையும் வேறு கம்பெனியோ பத்திரிகை ஆரம்பித்தால் இன்றுள்ள தொழிலாளர் சம்பளத்திற்குக் குறையாமல் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படு வார்கள். 22-12-1971 க்குள் வங்கியிலிருந்து கடன் கிடைத்து வேலை ஆரம்பிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: 22-11-1971 க்குள்ளாக கடன் கிடைக்கும் என்று எதிர்பார்த்திருப்பதாகச் சொன்னார்கள். இன்றைக்குத் தேதி என்ன? கடன் கிடைத்ததா, இல்லையா? இல்லை என்றால் அரசாங்கமே கடன் கொடுத்து உதவ முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: 22-12-1971 க்குள் கடன் கிடைக்கும் என்று எதிர்பார்த்திருப்பதாகச் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு அவசியம் இல்லை என்று கருதுகிறேன். ஆகவே, அதற்கான அனுமதியை நான் மறுக்கிறேன்.

(3) அறிவிப்புகள்

(அ) 1971-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1971-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(4) அரசினர் சட்டமுன் வடிவுகள்.

(அ) 1971-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த சட்டமுன்வடிவு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, 1971-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன் வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, 1971-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன் வடிவை அறிமுகம் செய்கிறேன்.